**பதுளை - செங்கல்லடி வீதி முன்னேற்ற செயற்திட்டம் - 2022**

-----------------------------------------------------------------------------------------------------------

பதுளை - செங்கல்லடி வீதி முன்னேற்ற செயற்திட்டத்தின் 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி**

கடன் உடன்படிக்கையின் பிரகாரம், போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்று முகவராக உள்ளதுடன் வீதி அபிவிருத்தி அதிகாரசபை அமுலாக்கல் முகவராக உள்ளது.

ஊவா மாகாணம் மற்றும் மத்திய மாகாணத்துடன் கிழக்கு மாகாணத்தின் தொடர்பை மேம்படுத்தி, பேராதனை – பதுளை - செங்கலடி வீதியின் பதுளை முதல் செங்கலடி வரையிலான 147 கிலோமீற்றர் வீதியை புனரமைப்பதன் மூலம் அப்பிரதேசத்தின் போக்குவரத்தை மேம்படுத்தி பொருளாதார நடவடிக்கைகளை முன்னேற்றுவதே செயற்திட்டத்தின் குறிக்கோள்களாகும்.

கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 18,200 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 140 மில்லியனாக இருந்ததுடன் அதில் ரூபா 7,800 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 60 மில்லியன் சர்வதேச அபிவிருத்திக்கான ஒபெக் நிதியத்தால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டதுடன் ரூபா 7,800 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 60 மில்லியன் அபிவிருத்திக்கான சவுதி நிதியத்தால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. மிகுதி ஐ.அ.டொலர் 20 மில்லியன் இலங்கை அரசாங்கத்தினால் நிதியளிக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2017 சனவரி 12 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2021 யூன் 30 அளவில் பூர்த்திசெய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது. எனினும், செயற்திட்ட நடவடிக்கைகளின் பூர்த்திசெய்தல் திகதி 2025 திசெம்பர் 31 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

**1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தை தவிர்த்து 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

**1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| இல. | கணக்கீட்டுக் குறைபாடு/ கணக்காய்வு விடயம் | தொகை ரூபா. மில்லியன் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | நிதி நிலைமைக் கூற்றில் காட்டப்பட்டுள்ள OFID நிதி மற்றும் SFD நிதியின் கடன் மீதியை நன்கொடை முகவரின் ஏடுகள் கிடைக்காததால் கணக்காய்வின் போது சரிபார்க்க முடியவில்லை. | 6,905.83 (OFID) 6,347.42 (SFD) | ERD மூலம் நன்கொடையாளர்களிடமிருந்து கடன் மீதிகளில் இருந்து உறுதிப்படுத்தல் கோரப்பட்டிருந்தது. எனினும், வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தினால் அனுப்பப்பட்ட பணவளிப்பு மீதிகள் கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. | நன்கொடையாளரிடமிருந்து கடன் உறுதிப்படுத்தல்கள் பெறப்பட வேண்டும். |
| (ஆ) | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களில் வட்டிக் கட்டணம் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவாக, நிதிக்கூற்றுக்களில் வெளிநாட்டுக் கடன் மீதி மற்றும் நடைமுறை வேலை என்பன அந்தத் தொகையால் குறைத்துக் காட்டப்பட்டுள்ளன. | 371.20 | கடன் மீள்கொடுப்பனவுடன் தொடர்புடைய வட்டிக் கட்டணம் வழங்கப்பட்ட கடன் தொகையின் ஒரு கூறாகச் செலுத்தப்பட்டிருக்காததுடன் இது திறைசேரியால் செலுத்தப்படுகிறது. இந்த நிதிக் கட்டணம் செயற்திட்டச் செலவின வாக்குப்பணத்திற்கு அறவிடப்படாமல் திறைசேரியால் செலுத்தப்படுகிறது. | வட்டிக் கட்டணம் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (இ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் - 04 இன் 18 ஆம் பிரிவின் பிரகாரம் சொத்துக்களை கையகப்படுத்துதல், நிர்மாணித்தல் அல்லது உற்பத்தி செய்தல் ஆகியவற்றுக்கு நேரடியாக பங்களிக்கக்கூடிய கடன்பெறல் கிரயம், அந்த சொத்துக்களின் கிரயத்தின் ஒரு பகுதியாக மூலதனமாக்கப்பட வேண்டும். எனினும், 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான RDA கடனுடன் தொடர்புடைய கடன்பெறுதல் கிரயத்தை இந்த செயற்திட்டம் மூலதனமாக்கியிருக்கவில்லை. | 2.54 | செயற்திட்டமானது RDA கடனிலிருந்து பெறப்பட்ட நிதியை மூலதனத்தின் கீழ் பதிவு செய்துள்ளது, ஏனெனில் இது RDA ஆல் பெறப்பட்ட கடனானதுடன் செயற்திட்டத்தால் அல்ல. எனவே, வட்டி மற்றும் மூலதன மீள்கொடுப்பனவு என்பன அவற்றின் இறுதியில் பதிவு செய்யப்படுகின்றன. எனினும், சொத்து RDA இற்கு மாற்றப்பட்டவுடன் கடன்பெறல் கிரயம் சொத்துக்கு மூலதனமாக்கப்படும். | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்தை கடைப்பிடித்தல். |
| (ஈ) | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான 05 காணித்துண்டுகள் தொடர்பான காணி | 0.80 | DS ஆல் மதிப்பீட்டு அறிக்கைகள் பெறப்பட்டதும், காணி | செலுத்த வேண்டிய இழப்பீடு பொறுப்பாகக் கணக்கீடு |

| | | | | |
|---|---|---|---|---|
| | சுவீகரிப்புக்கான இழப்பீடு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவாக நிதிக்கூற்றுக்களில் உள்ள பொறுப்புக்கள் அந்தத் தொகையால் குறைத்துக் காட்டப்பட்டுள்ளன. | | உரிமையாளரிடமிருந்து இழப்பீட்டிற்காக ஒப்புதலைப் பெற்றுக்கொள்வதற்கு பிரிவு 17 தீர்மானம் வழங்கப்படுகிறது. பின்னர் DS மாத்திரமே சான்றுபடுத்தப்பட்ட இழப்பீட்டு உறுதிச்சீட்டுக்களை செயற்திட்ட அலுவலகத்திற்கு கொடுப்பனவிற்காக அனுப்புகிறது. இந்த 5 காணித்துண்டுகள் தொடர்பான மதிப்பீடு 2022.12.31 இற்கு முன்னர் பெறப்பட்ட போதிலும் செயற்திட்ட அலுவலகத்தால் தொடர்புடைய சான்றுபடுத்தப்பட்ட உறுதிச்சீட்டுக்கள் 2023 சனவரி மற்றும் பெப்ரவரியில் பெறப்படுகின்றன. எனவே, 2022 ஆம் ஆண்டிற்குள் அது தெரிவிக்கப்படவில்லை, ஏனெனில் பிரதேச செயலாளரின் சான்றுபடுத்தலின் பின்னர் இழப்பீடு செலுத்தப்படுகிறது. | செய்யப்பட வேண்டும். |
| (உ) | 780 காணித்துண்டுகளுக்கான தாமத வட்டியும், 3339 காணித்துண்டுகளுக்கான இழப்பீடும் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்தப்பட வேண்டியிருந்த போதிலும் நிதிக்கூற்றுக்களில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவாக, நிதிக்கூற்றில் உள்ள பொறுப்புக்கள் அந்தத் தொகையால் குறைத்துக் காட்டப்பட்டுள்ளன. | 15.96 | காணிப் பிரிவு வழங்கிய தகவல்கள், பிரதேச செயலாளர்களிடமிருந்து சேகரிக்கப்பட்ட மதிப்பீடாகும், அவை சான்றுபடுத்தப்பட்டிருக்காததுடன் செயற்திட்ட அலுவலகத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். இந்த உறுதிச்சீட்டுக்கள் DS ஆல் முறையாகச் சான்றுபடுத்தப்படாததால், அத்தகைய தொகைகள் மீளாய்வாண்டின் கணக்ககுகளிற்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | நிதிக்கூற்றுக்களில் ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். |

**2.2 இணக்கம் செய்யப்படாத மீதிகள்**

| **நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் பெறுமதி ரூபா. மில்லியன்** | **தொடர்புடைய ஏடுகளின் பிரகாரம் பெறுமதி ரூபா. மில்லியன்** | **தொடர்புடைய ஏட்டின் விபரம்** | **முகாமைத்துவத்தின் பதில்** | **கணக்காய்வாளரின் பரிந்துரை** |
|---|---|---|---|---|
| 496.52 | 496.58 | PMU இன் காணிப் பிரிவால் சமர்ப்பிக்கப்பட்ட பட்டியல்கள் | காணிப் பிரிவு கணக்குப் பிரிவிலிருந்து வேறுபட்ட ஒரு தனி தரவுத்தளத்தை பேணுகிறது. எனினும், ஒரு பொதுவான தரவுத்தளத்தை பேணுவதற்கு எதிர்காலத்தில் பொறிமுறையொன்று அமுல்ப்படுத்தப்படும். | நிதிக்கூற்றுக்களில் உள்ள மீதிகள் ஆதார ஆவணங்களுடன் இணக்கம் செய்யப்பட வேண்டும். |

**2.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

| **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு** | **இணங்காமை/ கணக்காய்வு விடயம்** | **முகாமைத்துவத்தின் பதில்** | **கணக்காய்வாளரின் பரிந்துரை** |
|---|---|---|---|
| 2019 மார்ச் 05 ஆம் திகதிய 01/2019 ஆம் இலக்க முகாமைத்துவ சேவை சுற்றறிக்கை<br>9.3 ஆம் பிரிவு | குறைந்தபட்சம் இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை செயற்திட்ட வழிநடாத்தல் குழுக் கூட்டம் நடாத்தப்பட வேண்டும். ஆனால் மீளாய்வாண்டில் செயற்திட்ட வழிநடாத்தல் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டிருக்கவில்லை. | சமூக இடைவெளி தேவைப்பாட்டை நீக்குதல் மற்றும் பணியின் இயல்பான தன்மை குறித்த அறிவிப்புடன் செயற்திட்டங்கள் செயற்பாடுகள் தொடங்கப்பட்டதும், PSC முன்னேறி வருகிறது. | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களை பின்பற்றுதல். |

**3. பௌதீக செயலாற்றல்**

**3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக முன்னேற்றம்**

**(i) வீதி புனரமைப்பு**

| **கூறு** | **செயற்பாடு** | **2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு** | | **தாமதம்/ கணக்காய்வு விடயம்** | **தாமதங்களிற்கான காரணங்கள்** |
|---|---|---|---|---|---|
| | | **எதிர்பார்க்கப்பட்ட பௌதீக செயலாற்றல் சதவீதம்** | **அடைந்து கொள்ளப்பட்ட செயலாற்றல் சதவீதம்** | | |
| வீதி புனரமைப்பு | லுணுகல - பிபிலை நெடுஞ்சாலை | 100 | 60 | இணங்கப்பட்ட கால எல்லையினுள் ஒப்பந்தத்தை பூர்த்திசெய்ய இயலாமையின் காரணமாக 2021 யூன் 29 இல் ஒப்பந்தம் கைவிடப்பட்டிருந்தது. | ஒப்பந்ததாரரின் மோசமான செயற்பாடு. |

**முகாமைத்துவத்தின் பதில்** மலைப்பாங்கான நிலப்பரப்புடன் கூடிய வீதிப் பகுதியின் கடினம் மற்றும் கடினமான அகழ்வு வேலை காரணமாக வேலையில் மெதுவான முன்னேற்றம் இருந்ததன் காரணமாக வேலை முடிவுறுத்தலை தொழில்தருநர் வழங்கவில்லை. உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்குப் பின்னர் ஒப்பந்ததாரருக்கு வெடிகுண்டு பொருட்களை பெறுவது கடுமையான பிரச்சினையாக இருந்தது.

**கணக்காய்வாளரின் பரிந்துரை** ஒப்பந்த நிபந்தனைகளை கடைபிடித்தல்.

**(ii) காணி சுவீகரிப்பு**

| **கூறு** | **செயற்பாடு** | **2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு** | | **தாமதம்/ கணக்காய்வு விடயம்** | **தாமதங்களிற்கான காரணங்கள்** |
|---|---|---|---|---|---|
| | | **எதிர்பார்க்கப்பட்ட பௌதீக செயலாற்றல் காணித் துண்டுகள்** | **அடைந்து கொள்ளப்பட்ட செயலாற்றல் காணித் துண்டுகள்** | | |
| காணி சுவீகரிப்பு | உரிமைத்துவத்தை பதிவு செய்தல் | 5424 | 133 | இச் செயற்திட்டத்தால் 5,424 காணித் துண்டுகள் சுவீகரிக்கப்பட்டிருந்தன. 2,085 காணித் துண்டுகளுக்காக ரூபா 496.58 மில்லியன் இழப்பீடும் 326 காணித் துண்டுகளுக்காக ரூபா 10.9 மில்லியன் தாமத வட்டியும் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்தப்பட்டிருந்தன. | காணி சுவீகரிப்பு செயன்முறையில் செயற்திறனின்மை மற்றும் நிதிப் பற்றாக்குறை. |

**முகாமைத்துவத்தின் பதில்** இழப்பீடு மற்றும் வட்டிக் கொடுப்பனவின் பின்னர் பூர்த்திசெய்யப்பட்ட காணித்துண்டுகளுக்கு மாத்திரமே காணிப் பதிவு மேற்கொள்ளப்பட்டு, 44 ஆம் பிரிவின் கீழ் மாத்திரமே பதிவு செய்யப்பட்டன.

**கணக்காய்வாளரின் பரிந்துரை** மேலதிக கிரயத்தை தவிர்ப்பதற்கு காணி சுவீகரிப்பை பூர்த்தி செய்வதற்கு அதிகபட்ச முயற்சி எடுக்கப்பட வேண்டும்.

**3.2 ஒப்பந்த நிர்வாகம்**

| இல. | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | லுணுகல முதல் பிபிலை வரையிலான நெடுஞ்சாலை புனர்வாழ்வு மற்றும் மேம்பாடு (OFID-03 பிரிவு) ஒப்பந்ததாரருக்கு 2017 யூன் 12 இல் ரூபா 2006.43 மில்லியனிற்கு வழங்கப்பட்டது. ஒப்பந்த காலப்பகுதி 30 மாதங்களாகும். நிர்மாணத்தின் ஆரம்ப பூர்த்திசெய்தல் திகதி 2020 சனவரி 25 ஆக இருந்ததுடன் அது 2021 யூன் 19 வரை நீடிக்கப்பட்டது. மோசமான செயலாற்றல் மற்றும் இணங்கப்பட்ட காலத்திற்குள் ஒப்பந்தத்தை பூர்த்திசெய்ய இயலாமை காரணமாக ஒப்பந்தம் 2021 யூன் 29 இல் மூடப்பட்டிருந்தது. பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | | |
| (i) | ஒப்பந்ததாரரால் வழங்கப்பட்ட செயலாற்றல் உத்தரவாதம் 2022 யூலை 31 இல் காலாவதியாகியிருந்தது. ஆனால், செயலாற்றல் உத்தரவாதம் காலாவதியாவதற்கு முன்னர் ஒப்பந்தத்தை முடிவுறுத்துவதற்கு தொழில்தருநர் எந்த நடவடிக்கையையும் எடுத்திருக்கவில்லை. இதன் விளைவாக, ஒப்பந்தத்தின் தொழில்தருநராக RDA ஆனது ஒப்பந்ததாரர் ஒப்பந்தத்தை மீறியதற்காக செயலாற்றல் உத்தரவாதத்தின் மீது உரிமைகோருவதற்கான வாய்ப்பை இழந்திருந்தது. | மலைப்பாங்கான நிலப்பரப்புடன் கூடிய வீதிப் பகுதியின் கடினம் மற்றும் கடினமான அகழ்வு வேலை காரணமாக வேலையில் மெதுவான முன்னேற்றம் இருந்ததன் காரணமாக வேலை முடிவுறுத்தலை தொழில்தருநர் வழங்கவில்லை. உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்குப் பின்னர் ஒப்பந்ததாரருக்கு வெடிகுண்டு பொருட்களை பெறுவது கடுமையான பிரச்சினையாக இருந்தது. பின்னர் ஒப்பந்ததாரருடன் பேச்சுவார்த்தை நடாத்தி செயற்திட்டத்தை பூர்த்தி செய்வதற்கு தொழில்தருநர் முயற்சித்ததுடன் ஒப்பந்ததாரருக்கு செலுத்தப்பட்ட முற்பணத்தை அறவிட்ட பின்னர் ஒப்பந்ததாரரின் ஒப்புதலுடன் பரஸ்பர முடிவுறுத்தலிற்கு பரிந்துரைத்தார். | ஒப்பந்த நிபந்தனைகளை கடைபிடித்தல். |
| (ii) | வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் சட்டத்தின் 2022 ஆகஸ்ட் 05 ஆம் திகதிய ஆர்டிஏ/எல்டி/பீசீஆர்ஜபி ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம், 2021 யூன் 29 அளவில் 60 சதவீத பௌதீக முன்னேற்றத்துடன் ஒப்பந்தம் முடிவுக்கு வந்துள்ளது. எனினும், நீடிக்கப்பட்ட திகதியிலிருந்து ஒரு வருடத்திற்குப் பின்னரும் ஒப்பந்ததாரரால் வழங்கப்பட்ட செயலாற்றல் உத்தரவாதத்தின் காலாவதியின் பின்னரும் 2022 ஆகஸ்ட் | இந்த விடயத்திற்காக நியமிக்கப்பட்ட குழு, ஒப்பந்தத்தை பரஸ்பரம் இணக்கமாக முடிவுறுத்துவதற்கான பரிந்துரையை வழங்கியது. எனவே இரு தரப்பினரும் பரஸ்பரமாக ஒப்பந்தத்தை மூடுவதற்கு இணங்கியிருந்தனர். பின்னர் செயலாற்றல் உத்தரவாதம் மூலம் | ஒப்பந்த நிபந்தனைகளை கடைபிடித்தல். |

| | | | |
|---|---|---|---|
| | 04 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் ஒப்பந்ததாரர் மற்றும் தொழில்தருநரின் பரஸ்பர உடன்படிக்கையுடன் ஒப்பந்தத்தை மூடுவது தொடர்பாக சட்டமா அதிபர் திணைக்களத்தின் கருத்தை RDA கோரியுள்ளது. | உரிமைக்கோரலிற்கு தேவைப்பாடு காணப்படவில்லை. | |
| (iii) | இரண்டு ஒப்பந்தப் பொதிகளாகப் பிரிப்பதன் மூலம் ஒப்பந்தப் பொதியை (OFID 03) மீள்கேள்வி கோருவதற்கு RDA நடவடிக்கை எடுத்துள்ளதுடன் அந்த ஒப்பந்தங்கள் தற்போதுள்ள ஒப்பந்தத்தின் முடிவுறுத்தல் நடைமுறையை இறுதி செய்வதற்கு முன்னர் 2022 திசெம்பர் 01 இல் மீண்டும் வழங்கப்பட்டிருந்தன. அத்தகைய புதிய உடன்படிக்கைகளில் நுழைவதற்கான சட்ட அடிப்படை கணக்காய்விற்கு வெளிப்படுத்தப்படவில்லை. மேலும், ஏற்கனவே உள்ள ஒப்பந்தம் நிறுத்தப்படாததால், முன்னைய ஒப்பந்ததாரரால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் அபாயம் உள்ளமை அவதானிக்கப்பட்டது. | எந்தவொரு சர்ச்சைக்குரிய விடயங்களும் காணப்படவில்லை என்று பரஸ்பரமாக ஒப்பந்தத்தை முடிப்பதற்கு இரு தரப்பினரும் நல்ல நம்பிக்கையுடன் செயற்படுகிறார்கள். எனவே, ஒப்பந்தத்தில் நுழைவதில் எந்த ஆபத்தும் காணப்படவில்லை. ஒப்பந்தத்தின் தொடக்க திகதி 2022 திசெம்பர் 01 ஆக இருந்ததுடன் நன்கொடையாளர் ஒப்புதல் மற்றும் சபையின் அங்கீகாரத்திற்குப் பின்னர் 2022 நவம்பரில் ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டன. | ஒப்பந்த நிபந்தனைகளை கடைபிடித்தல். |
| (iv) | சட்டமா அதிபர் திணைக்களத்தின் 2022 நவம்பர் 17 ஆம் திகதிய கடிதத்தின் பிரகாரம், ஒப்பந்தத்தின் ஏற்பாடுகளுக்குள் RDA செயற்பட வேண்டிய போதிலும் RDA அதன் பிரகாரம் செயற்படத் தவறியிருந்ததுடன் கணக்காய்வு செய்யப்பட்ட திகதியான 2023 ஆகஸ்ட் 14 வரையிலும் முடிவுறுத்தல் செயன்முறை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவாக, ரூபா 208.67 மில்லியன் தொகையான வேலை ஆரம்பிப்பு முற்பணத்தை அறவிடுவதில் நிச்சயமற்ற தன்மை காணப்படுவது அவதானிக்கப்பட்டது. | ஒப்பந்ததாரருடன் உடன்பட்டு, ஒப்பந்ததாரருக்குச் செலுத்தப்பட்ட அனைத்து முற்பணத்தையும் அறவிட்ட பின்னர் நேரத்தைச் செலவிடுதல் மற்றும் விலையுயர்ந்த வழக்குப் பணிகளைத் தவிர்ப்பதற்கு பரஸ்பர முடிவுறுத்தலிற்குச் செல்வதற்கான சிறந்த கருத்து தொழில்தருநரிற்கு உள்ளது. | ஒப்பந்த நிபந்தனைகளை கடைபிடித்தல். |
| (ஆ) | உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திடமிருந்து ஒப்பந்தங்களுக்கான வற் மற்றும் NBT விலக்குகளைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவாக, 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 680.99 மில்லியன் வற் மற்றும் NBT கொடுப்பனவு காரணமாக செயற்திட்டக் கிரயம் அதிகரித்திருந்தது. | நிதிக் கொள்கைகள் திணைக்களத்திடம் இருந்து சிவில் வேலை ஒப்பந்தங்களுக்கு வற் விலக்குகள் கோரப்பட்டதுடன் செயற்திட்டம் ஒரு விசேட செயற்திட்டமாக வகைப்படுத்தப்படாததால் விலக்குகள் வழங்கப்படவில்லை. | தொடர்புடைய சட்டங்களின் நிபந்தனைகளை கடைபிடித்தல். |

### 3.3 குறைப்பயன்பாடுடைய வளங்கள்

| இல. | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஐ.அ.டொலர் 140 மில்லியனிற்கு சமமான ரூபா 18,200 மில்லியன் மொத்த ஒதுக்கீட்டில் 6 ஆண்டுகள் கடந்த பின்னர் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 16,881.86 மில்லியனை மாத்திரமே செயற்திட்டம் பயன்படுத்தியிருந்தது. எனவே, 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 1,318.14 மில்லியனுக்கு சமமான 7.2 சதவீதம் மிகுதியாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. | முக்கியமாக, ஐ.அ.டொலருக்கு எதிராக ரூபாய் பெறுமதி சரிவு மற்றும் செயற்திட்ட சேமிப்புக்கள் காரணமாக கடன் சேமிப்புக்கள் ஏற்படுகின்றன. | செயற்திட்ட நிதிகள் செயற்திறனாக பயன்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டிற்கான நிதி ஒதுக்கீடு ரூபா 2,625 மில்லியனாக இருந்த போதிலும் செயற்திட்டம் மீளாய்வாண்டில் ரூபா 1,163 மில்லியனை மாத்திரமே பயன்படுத்தியிருந்தது. OFID 3 பொதியின் மோசமான செயலாற்றல் முக்கியமாக அந்த சூழ்நிலையில் பாதிப்பை ஏற்படுத்தியது. | 2022 ஏப்ரல் முதல் OFID 03 இன் மிகுதி வேலையை நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் நாட்டின் திவால் அறிவிப்பின் காரணமாக நன்கொடையாளர் இணக்கப்பாடு 2022 ஒக்தோபர் வரை தாமதமாகியிருந்தது. | செயற்திட்ட நிதிகள் செயற்திறனாக பயன்படுத்தப்பட வேண்டும். |